# இயல் நான்கு

# அணிவகைகள்

## 4.0 முகவுரை.

ஓர் இலக்கியக் கலைஞன் தன் படைப்பின் வழி வாசகர் உள்ளத்தை ஈர்க்க பல நெறிமுறைகளைக் கையாளுகிறான். உணர்வும், கற்பனையும், நடையும் ஓர் இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளாகும். மொழிவாயிலாக வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படைத்து அவற்றைச் சுவைப்பதற்குக் கவிஞன் அணிவகைகளைக் கையாளுகிறான். காப்பியக் கலைக்கு அணிவகைகள் மெருகூட்டுகின்றன. கந்தபுராணத்தில் பயின்றுவரும் முக்கிய அணிவகைகளைக் காண்போம்.

4.1 தெரிந்த ஒரு பொருளைக் கையாண்டு, தெரியாத ஒரு பொருளுடன் ஒப்புமைப்படுத்திக் கூறுதல் உவமை, அதாவது, இருபொருள்களின் ஒப்புமைத்தன்மையைப் புலப்படுத்துவது என்பது, உவமை அணிகளுள் தலையாயது, மொழியின் வளர்ச்சியோடு, பல்வேறு அணிவகைகளும் ஒன்றுபட்டு வளர்ந்தன, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணங்களும் மொழித்திறனை வளர்க்கப்பயன்படுவன. அழகு செய்து நிற்பது அணி. அணிநயம் பொருள் நயத்துக்கு மெருகூட்டுகிறது. எல்லாமொழி இலக்கியங்களிலும் உவமையணியே இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியம் முதலான எல்லா இலக்கண நூல்களும் உவமையணியைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

## 4. 1. 1 உவமையணியின் தொன்மை

தொல்காப்பியருக்கு முன்பே அணிபற்றிய சிந்தனைகள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கு அணிஇலக்கண மரபுகளைக் கூறும் நூற்பாக்கள், 'என்ப' மொழி எனச்சுட்டுவதைச் சான்று கூறுவர்.

"விரவியும் வரூஉம் மரபின என்ப" (1)
"உவமப் போலி ஐந்தென மொழிப்" (2)

வடநூலார் அணியை அலங்காரம் என்பர். அலங்காரங்களுள் முதன்மையானது உவமை என்றும் வடமொழியில் முதல் இலக்கியமான வேதத்திலேயே உவமைகள் ஆளப்படுகின்றன என்றும் கூறுவர். வடமொழியில் ரிக் வேதத்தில் சொல்லை அழகு படுத்திக் கூறும் நெறிகளை ஓசையணிகள் (சப்தம்) பொருளணிகள் (அர்த்தம்) எனப்பாகுபடுத்தி உரைப்பர். வால்மீகி முனிவர் பறவை ஒன்றை அம்பெய்து வீழ்த்தியபோது எழுந்த மன உணர்ச்சியை, வெளிக்காட்ட உணர்த்திய திறமை அணியலங்கார ஆய்விற்கு வழி கோலியது என்பர். அதனையொட்டி எழுந்த வட மொழி இலக்கணநூலே தமிழில் தோன்றிய அணி இலக்கணநூல்களுக்கு அடிப்படையாக அமைந்தன என்பர். அவை வருமாறு.

## 4. 1. 2 சில சான்றுகள்

போஜன் என்பவர் (கி.பி 1018- 1054) இயற்றிய சரஸ்வதி காண்டாபரணமும், மம்மபட்டர் (கி.பி. 1110- 1150)

எழுதிய லாசித்ய மீமாஞ்சையும், ஜய தேவன் (கி.பி 1200-1300) உரைத்த சந்திரா லோகமும், வித்யாதரன் (கி.பி. 1282-1327) எழுதிய ஏகாவளியும், விசுவநாதன் (கி.பி. 1300-1388) இயற்றிய சாகித்ய தர்ப்பணமும், அம்மைய தீட்சிதர் (1520- 1593 ) எழுதிய சித்திர மீமாஞ்சை குவலயானந்தம் முதலிய நூல்கள் பலவும் தமிழிலக்கண அணி கோட்பாடுகளுக்கு உறுதுணை புரிந்தன என்பர். தொல்காப்பிய உவமவியல் இவற்றுள் அடங்குமா என்பது ஆய்வுக்குரியது.

### 4. 1. 3 அணிமரபு

இடைக்காலத்தே வடமொழியின் ஆட்சியால், அணியிலக்கணம் வகுக்க முனைந்த பலரும் வடநூற் கருத்துக்களை அவ்வாறே தந்தனர். எனவே, தமிழ்இலக்கிய மரபோடு இவ்வணியிலக்கணநூல்கள் பொருந்தி வரவில்லை. சான்றாக வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய நூல்களைக் குறிப்பிடலாம். இவற்றின் ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய மரபிற்கு ஏற்றவாறு அணியிலக்கணத்தை அமைத்துக் கொள்ள இயலாமையால், பல மேற்கோள் செய்யுட்களை ஆசிரியர் தாமே படைத்துக் கொள்ள நேர்ந்தது, உவமையொன்றினையே அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் தம் நெறியினின்றும் மாறுபட்டு, காலப்போக்கில் பலநூறு அணிகளைக் கொண்டதாக அவை அமைந்தன. அணிவளர்ச்சிப் போக்கினை பின்வருமாறு அமைத்துக் காட்டலாம்.

| | நூல் | காலம் | அணிகள் |
|---|---|---|---|
| 1. | தொல்காப்பியம் | கி.மு.3அல்லது 4 | உவமைமெய்ப்பாடு என இரண்டு |
| 2. | வீர சோழியம் | கி.பி.11 | 35 |
| 3. | தண்டியலங்காரம் | கி.பி.12 | 35 |
| 4. | மாறனலங்காரம் | கி.பி 16 | 64 |
| 5. | இலக்கண விளக்கம் | கி.பி 17 | 35 |
| 6. | தொன்னூல் விளக்கம் | கி.பி 18 | 30 |
| 7. | முத்து வீரியம் | கி.பி 19 | 58 |
| 8. | சுவாமிநாதம் | கி.பி.19 | 31 |
| 9. | சந்திராலோகம் | கி.பி.19 | 100 |
| 10. | குவலயாநந்தம் | கி.பி. 19 | 120 |

இவற்றுள்ளும் தொல்காப்பியர் தனியே ஒரு இயலாக அமைத்த மெய்ப்பாட்டியலைப் பின்னர் வந்த அணிநூலார், "சுவையணி" எனச் சுருக்கி அமைத்தனர். இது பற்றி மு.வ. அவர்கள், மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியல் என்ற தனியே ஒரு இயல் வகுத்து, அதன் பல்வகைப் பாகுபாடுகளையும் தெளிவாகக் கூறியிருக்க, இடைக்கால அணியிலக்கண நூலார் அவையனைத்தையும் ஒரு சிறிதும் விளக்காமல் அதற்கு நேர்மாறாகச் சுவையணி என்ற ஒரு சிறு அணியாக அடக்கி சுருக்கிச் கூறியுள்ளார் எனக் கணிக்கிறார். (3) எனவே, முறையாகப் பிற்காலத்தே வளர்ந்து விளங்கியிருக்க வேண்டிய மெய்ப்பாட்டியல் கோட்பாடு, இடைக்காலத்தே குன்றி சுவையணி ஒன்றிலேயே அமைந்துவிட்டது எனலாம்.

### 4. 1. 4 உவமை- சொல்லாய்வு

உவமை எனும் சொல் 'உபமா' எனும் வடசொல்லின் திரிபு எனக் கருதுவர். உவமை எனும் சொல் குறித்து ஆராய்ந்த முனைவர் மா. இளைய பெருமாள் ஒத்தல் என்பதன் அடி 'ஒல்' என்பதாகும். இந்த 'ஒல்' என்னும் அடியானது அகரச் சாரியையும் மை விகுதியையும் பெற்று 'ஒவமை' என ஆகும். பின் இது இரண்டு அம் சாரியைகள் பெற்று ' ஓவமம்' எனத் திரிந்து அதன்பின் ஒகர, உகரத் தடுமாற்றத்தால் உவமம் என வழங்கப்பெறும் என்கிறார். (4)

### 4. 1. 5 ஒத்தல் என்னும் சொல்

மு.வ. "ஒத்தல் என்ற வினைக்கு ஒவ்வுதல் என்ற வினை அடியும் உண்டு. புறநானூற்றில் வருகின்ற ஒவ்வாயாவுள (பாடல் 167 வரி 9) என்ற சொல்லும், ஐங்குறு நூறில் காணப்படும் பலதிவண் ஒவ்வாய் (பாடல்-75) என்ற எதிர்மறை வினையும், ஒக்கும் என்ற பொருளில் வரும் ஒவ்வும் என்ற சொல்லும் இதனை விளக்கும். மை விகுதியும் பெற்று ஒவமை என்ற வடிவத்தையும் ஒரு காலத்தில் பெற்றிருக்க வேண்டும். இகர, எகரத்தடுமாற்றத்தில் குறிப்பிட்டது போல ஒதை, ஒடம்பு, ஒணர்வு, ஒதவி, ஒரல், ஒலை, ஒறவ என்ற வடிவங்கள் உகர முதனிலை வடிவங்களாகத் திருத்தப்பட்ட போது ஓவமம், ஒவமை ஆகிய சொற்களும் உவமம், உவமை ஆகிய வடிவத்தைப் பெற்று பிழையற்ற வழக்காக எண்ணப்பட்டிருத்தல் வேண்டும்." (5) இவ்வாறு, உவமை என்ற சொல்பற்றி இருவேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. உபமா என்ற சொல்லினின்றும் தோன்றியது என்பதை விட ஒப்புமை என்ற

சொல்லின் வழியாகப் பிறந்தது எனக் கொள்ளுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

### 4. 1. 6 உவமம் அல்லது உவமை.

உவமம், உவமை என்ற இரண்டும் உவமையைக் குறிக்கும் சொற்களே. உவமம்- தற்பவம், உவமை-இயற்சொல். இதனை இலக்கண ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுகள் வாயிலாக உணர்த்தியுள்ளனர்.

நச்சினார்க்கினியர், சீவகசிந்தாமணிப் பாடல் ஒன்றை எடுத்துக்காட்டி அப்பாடலில் 'உலாம்' என்று வருவதை உவமைச் சொல் எனவும், மற்றொரு பாடலில் செய என வருவதை உவமச்சொல் எனவும் குறித்தலைச் சுட்டிக்காட்டு கின்றார். எனவே, உவமை, உவமம் என்னும் இரண்டும் உவமையைக் குறிக்கும் சொற்களே. அவை உரையாசிரியர்கள் முதலாக எடுத்தாளப்பட்டு ஆட்சி பெற்றுள்ளது எனக் கருதலாம்

### 4. 1. 7 அணிகளின் தோற்றத்திற்கு உவமையே அடிப்படை

உவமை ஒன்றே, எடுத்துக்காட்டு உவமை, உருவகம், பிறிதுமொழிதல் முதலிய பலவாக வேறுபட்டு வருதலைக் காணலாம். எனினும் அவற்றைக் தொல்காப்பியர் இன்றைய அளவில் விரிவாக விளக்கவில்லை. அவர் உவமவியலை மட்டும் ஏன் படைத்தார் என்பது ஆய்வுக்குரியது.

அணிகளுக்கெல்லாம் மூலமாக உவமையை அவர் கருதியதால்தான், அதைப்பற்றி மட்டும் அவர் கூறியிருக்க வேண்டும். இக்கருத்தையே அம்மைய தீட்சிதர் என்பவர் தாம் வடமொழியில் இயற்றிய சித்திர மீமாம்சை என்னும் நூலில் கூறியுள்ளார்.

"உவமம் என்னும் தவலரும் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூம்ப நடிக்குமே" (6)

என்பது அதன் மொழி பெயர்ப்பாகும்.

"செறிவும் பொருளழுத்தமும் சிறக்கப் புனையும் பொருள் ஒப்பீட்டுத் திறனாகிய உருவகத்திலும் உயர்ந்தது உவமை. ஏனெனில் உவமை, பொருளைத் தெளிவாக விளக்கிப் புலப்படுத்தும் திறத்தால், உணர்ச்சி , காட்சி, வண்ணம், வடிவம், தொழில் ஆகியவற்றை அணிநலச்சிறப்புடன் வெளிப்படுத்துவது, எதனையும் அழகின் வடிவமாகவே அமைத்தளிக்கும் ஆற்றல் மிக்கது" என பிரிட்டிஷ் கலைக்களஞ்சியம் விளக்குகின்றது. மேலும், தொல்காப்பியர், "உவமைகள் வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகையாக அமையும்" எனக் கூறுகின்றார் (8) அணி வகைகளுள் அடிப்படையானதும், மிகுந்த பயிற்சி உடையதும், இலக்கியத்திற்கு இன்றியமையாததும், பல்வகைப் பொருளணி களின் தோற்றக்களனாய் அமைதலும் உவமையே. எனவே உவமை முதன்மையாகச் சிறப்பிக்கப் படுகின்றது.

### 4. 1. 8 உவமைகாலத்தால் முற்பட்டது.

உவமை காலத்தால் முற்பட்டது தொல்காப்பியர் உவமையியல் என்னும் ஓரியலையே வகைப்படுத்து தற்குக்காரணமாகச், சங்கப்பாடல்களில் ஏறத்தாழ தொண்ணூறு விழுக்காடு உவமையே இடம் பெறுவதால் இருக்கலாம். இ∴து தொல்காப்பிய உவமையிலுக்கு அரணாக அமைகிறது. எனவே, இலக்கியத்தை அழகுபடுத்தும் முதல் அணி உவமை எனின் மிகைய[illegible]து. எல்லா அணிகளுக்கும் வேராக விளங்குவதும், காலத்தால் முற்பட்டதும் உவமையணியே எனலாம்.

### 4. 1. 9 உவமைப்பயன்

படைப்பாளர்கள் கையாளும் கலைநுணுக்கத் திறன்களில் ஒன்றாகிய உவமை, படைப்பாளியின் அறிவுநுட்பத்தினையும், புலமைத்திறத்தையும், கருத்தா ழத்தையும் புலப்படுத்துகின்றது. இத்தகைய திறமைகளுக்கு ஏற்ப உவமைகள் பல வடிவங்களைப் பெறுகின்றன. புலவர்கள் வாழ்ந்த இடம், காலம், அவர் நாட்டின் காலநிலை ஆகியவற்றின் அடிச்சுவடு உவமைகளில் நன்கு பதிகின்றன.

'காப்பியத்தன்மை வாய்ந்த உவமைகள் ஒரு நாட்டின் வரலாறு, புராணம், சமயம் ஆகியவற்றை அவை அறியாமலேயே போற்றிக் காப்பாற்றி வரும் கருவிகளாக நிற்கின்றன.'
என்கிறார் இந்திரா சுப்பு லட்சுமி. (9)

"உவமை கலைஞனின் ஒண்மையை உணர்த்தும் உரைகல்" (10) என்கிறார் விமலானந்தன்.

மு.வ. "அழகுள்ள ஒரு பொருளை மற்றொன்றன் அழகோடு ஒப்பிட்டுக் காணும் இந்த உவமையே கலைகள் சிலவற்றிற்கு அடிப்படை" (11) என்கிறார்.

கவிதைகளைத் தகுதியாக்குவதும், அழகு படுத்துவதும் உவமையேயாகும். உவமம் கவிதைக்கு அழகுப்படுத்துவது மட்டுமன்றி, தெளிவும், அழகும், உருவும், செறிவும் தருகின்றது. பொருளின் உண்மைத் தன்மையை அறிவதற்கும் பண்டைத்தமிழரின் பண்பாடு, நாகரீகம், பழக்க வழக்கம் ஆகியவற்றை அறிவதற்கும் உவமைகள் துணைபுரிகின்றன. உவமையின் பயன்குறித்து எண்ணிய உரையாசிரியர்கள் இருவகை கோட்பாடுகளைக் கொண்டுள்ளார்கள். உவமையால் புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்போர்க்கும் இன்பம் பயத்தலும் இதன் பயன்கள் என்பர். எனவே, உவமை, பொருளை விளக்குவதற்குப் பயன்பட்ட அளவையாகவும் விளங்கியது. எனலாம்.

## 4. 1. 10 உவமையின் உயர்வு

உவமைகள் பொருளினைப் புலப்படுத்துவதோடு, அப்பொருளை சிறப்பிக்கக் கூடிய முறையில் உயர்ந்தனவாக அமைதலும் வேண்டும். பொருளின் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த உவமையைக் கையாளுவதே மிகவும் சிறந்தது.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை . . . . ."(12)

சுப்புரெட்டியார், "உலக வழக்கில் இகழ்ந்ததெனக் கருதப்பெறும் பொருளை உவமையாக எடுத்தாள வேண்டிய சூழல் நேரிடும். அப்போது அதன்கண் அமைந்த, உயர்ந்த குறிப்புப்பட உவமம் செய்தல் வேண்டும் என்பதைக் குறிப்பால் புலப்படுத்தினார் இலக்கணநூலார். எனவே மிக இழிந்ததெனக் கருதும் பொருளை உவமையாகக் கொள்ளும்மரபு இலக்கிய உலகில் மிகவும் குறைவு எனலாம்". (13) என்பார்.

## 4. 1. 11 சிறந்தது எது ?

ஒரு பொருளுக்குப் பல உவமைகள் இருக்கலாம் அவற்றுள் எது சிறந்தது எனத் தெரிந்து ஆளுதல் வேண்டும்.

உவமையைக் கூறிய அளவிலே கேட்போர்க்கு இன்பம் விளைதல் வேண்டும். கலைஞனின் உள்ளத்திலிருந்து இவ்வுவமை விளைந்தால்தான் கேட்போரும் இன்பம் எய்துவார்கள். இவ்வாறு வெளிவரும் உவமைகளே மிக சிறந்தனவாகும் . எடுத்துக்காட்டாக,

"நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்" என்ற நாலடியார் பாடல்வரியில் இழிந்த பொருள் எனக் கருதப்படும் நாயின்கண் உள்ள நற்குணத்தை எடுத்து பொருளுணர்த்தப்பட்டது விளங்கும்.

## 4: 1: 12 உவமையின் நிலைக்களம்

"சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பே நிலைக்கள மென்ப " (15)

என்பர் தொல்காப்பியர், உவமையானது சிறப்பு, நலன், காதல், வலி ஆகியவற்றை நிலைக்களன்களாகக் கொண்டு பிறக்கும். அவற்றிற்குரிய எடுத்துக் காட்டுகளைக் கூறுங்கால்,

"முரசு முழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅல் "(16)

என்ற பொருநராற்றுப்படை பாடல்வரி 'சிறப்பு' பற்றி வந்ததைக் காட்டுகிறது.

"ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்" (17)

என்ற புறப்பாடல் அடி 'நலம்' பற்றி வந்ததைக் காட்டுகிறது.

"கண் போல்வான் ஒருவனுளன்"

என்ற பாடல் 'காதல்' பற்றிய நிலைக்களத்தைச் சுட்டுகிறது.

"அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்" (18)

என்ற பாடல் வரிகள் 'வலிமை பற்றி' வந்தது.

4. 1. 13 சிறப்புவகை.

'சிறப்பு' என்பது உலகத்துள் இயல்பு வகையானன்றி விகார வகையாற் பெறும் சிறப்பு. நலனென்பது அழகு. காதல் என்பது அந்நலனும் வலியும் இல்வழியும் உண்டாக்கி உரைப்பது. வலி என்பது தன்றன்மையானே உள்ளதொரு வலி, என்பார். (19) பேராசிரியர்.

இவை மட்டுமன்றி ஒரு பொருளை இழிவுபடுத்தும் போது உவமையைப் பயன்படுத்துவது.

"கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்" (20)

எனத் தொல்காப்பியம் கூறும்.

எனவே. சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கினோடு, கிழக்கிடு பொருளாகியதும் சேர்ந்து உவமத்தின் நிலைக்களம் ஐந்து எனக் கொள்ளலாம்.

உவமையும் கிழக்கிடப்பட்டன வெனின், அவை பொருளொடு சார்த்தி நோக்க உயர்ந்தன எனப்படும்.

"அரவு நுங்கு மதியின் நுதலொளி கரப்ப" (21)

என்னும் அகப்பாடல் வரி, பிரிவிடை வேறுபட்டு வருந்தும் தலைமகளது நுதல் ஒளியிழந்த நிலையினைக் கூறுவது. இராகுவென்னும் பாம்பினால் விழுங்கப்பட்டு ஒளியிழந்த திங்களை

அதற்கு உவமை கூறியதால், இது கிழக்கிடு பொருள் நிலைக்களனாகப் பிறந்த உவமையாகும்.

மாறனலங்காரத் தொடரும் தொல் காப்பியரின் கருத்தையே வலியுறுத்துகின்றது.

"காதல் சிறப்பே நலன் வலியுடன் இழி
போதிய வைந்தும் உறுநிலைக்களனாய் " (22)

என்கிறது மாறனலங்காரம்.

## 4. 1. 14 உவமையின் வகைகள்

### 4. 1. 14. 1 தொல்காப்பியர் கருத்து

தொல்காப்பியர் உவமையணியின் இலக்கணத்தைக் கூறும் போதே அதன் வகைகளையும் தெளிவுபடுத்துகின்றார்.

"வினை பயன் மெய்யுரு வென்ற நான்கே
வகை பெற வந்த உவத் தோற்றம் " (23)

தொழில், பயன், வடிவு, நிறம் என்று சொல்லப்பட்ட நான்கும் உவமையணியின் அடிப்படை.

வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு உவமைக ளையும் பண்பு, தொழில், பயன், என்ற மூன்றினுள் அடக்குவர் தண்டியாசிரியர்.

"பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை" (24)

இவ்வாறே முத்து வீரிய ஆசிரியரும் வகைப் படுத்துவார் ஆனால், மாறனலங்கார ஆசிரியர்,

"உவமையின் வகையை உணருங்காலை
வினை பயன் உறுப்பு உருவென்ற நான்கினும்" (25)

எனக் குறிப்பிடுகின்றார். மெய்யுவமையையே உறுப்புவமை என இதனைப் பெயரிட்டு அழைப்பர். பேராசிரியர் உவமையை நான்கெனப்படுத்தற்குரிய காரணத்தையும் இவ்வாறே விளக்குகிறார்.

"மற்று அடைசினை முதல் என்றாற்போல் அடையெனவே இந்நாற்பகுதியும் அடங்கக் கூறிப், பண்புத் தொகை என்புழி, வண்ணம், வடிவு முதலாயின அடங்கியவாறும் போலப் பண்பென்று அடங்குதல் செய்யாது, ஈண்டு நான் கெனப் படுத்தென்னையெனின், இது பொருளாராய்ச்சியாதலாற், கட்புலனாம் பண்பும், உற்றுணரும் பண்பும் வேறாக நோக்கி, வடிவினையும் இருவினையும் வேறுபடுத்தானென்னை! வடிவு பற்றிய பண்பினை இரவின்கண் உற்றுணரப்படும், வண்ணமாயின் அவ்வாறு உணரப்படாதென்பது அல்லாக்காற் பகற்குறிக்கண் கூறப்படும், வண்ணம் முதலியனாவும், இரவுக் குறிக்கண் எய்துவான் சொல்லும் வடிவும் பண்பும் ஒன்றாகக் கூறினர்" (26) என்பது சேனாவரையர் உரை.

பகுப்பு முறை மூன்று அல்லது நான்கு என வகைப்படுத்துமிடத்து, பண்பில் உருவையும் மெய்யையும் அடக்காது தொல்காப்பிய நெறிப்படி நான்கெனப் படுத்தலே சிறந்தது.

### 4. 1. 14. 2 தண்டியாசிரியர் கருத்து

தண்டியாசிரியர், "பண்பு, தொழில், பயன் என்பன வற்றைக் காரணமாகக் கொண்டு ஒன்றும் பலவுமாகிய பொருளோடு பொருளை இயைய வைத்து அவ்விரு பொருளுக்குமிடையே ஒப்புமை தோன்றுமாறு பாடுவது உவமையணியாகும்" (27) என்றார். ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்தல் என்பது, ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பலபொருளோடு ஒரு பொருளும் இயையப் புணர்த்தலாகும். புணர்த்துச் சொல்லப்படும் அவ்விரு பொருள்களுக்குள் உவமானம் என்பது உவமை எனவும், உவமேயம் என்பது பொருள் எனவும் வழங்கப்படும். உவமை, பொருள் ஆகிய இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும் தன்மை பொதுத்தன்மை எனப்படும்.

### 4. 1. 15 இருவர் தம் பார்வை

இனி, தொல்காப்பியர் குறிப்பிட்டபடி வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட உவமைகளை நோக்குங்கால்,

புலிபோல பாய்ந்தான் - வினை

மாரியன்ன வண்கை - பயன்

துடிபோலும் இடை - வடிவு

தளிர் போலும் மேனி - நிறம்

வினை, பயன், மெய், உரு என்ற வைப்புமுறைக்குக் காரணம் கூறுங்கால் வினையால் விளைவது பயனாதலின் இது வினையின் பின் கூறப்பட்டது. பிறப்பினால் தோன்றும் நிறத்தினை அதற்குப் பின் வைத்தான். பயனும் பொருளாக நோக்கி மெய்யினையும் அதனுடன் வைத்தான். என்பது மற்று மெய்யெனப்படுவது பொருளாதலின், அதன் புடை பெயர்ச்சியாகிய வினை, பிற்கூறுகவெனின், வினையுவமம் தன்னுருபு தொக்கி நில்லாது விரிந்தே நிற்றற் சிறப்புடையனவும் உளவாக நோக்கி, அது முற்கூறினானென்பது. அது புலி மறவன் என விரிந்தே நிற்றலும், புலி பாய்த்துள் எனத் தொக்கு வருதலுல் உடைத் தென்பது (28) என்பர் உரையாசிரியர். இளம்பூரணம் உள்ளிட்ட ஏனைய உரையாசிரியர்கள் இந்த அமைப்புக்குக் காரணம் கூறவில்லை. வீரசோழியம், முத்துவீரியம், மாறனலங்காரம் ஆகிய நூல்களிலும் இவ்வமைப்பு முறைக்குக் காரணம் கூறப்படவில்லை.

இனி தண்டியாசிரியர் கூறிய பண்பும், தொழிலும் பயனும் என்றவற்றின் அடிப்படையில் தோன்றி உவமையின் வகைகளை நோக்கும் பான்மையைப் பார்ப்போம்.

### 4. 1. 15. 1 பண்புவமை

பண்பாவது குணமாகும். ஒரு பொருளோடு தனக்கென்று ஒரு குணம் இருக்க, வேறொரு குணம் இல்லாமல் இருத்தலாகும். அப்பண்பு, வண்ணம், வடிவு, அளவு என்பன. வடிவு என்பது வட்டம், சதுரம் என்பன, அளவு என்பது நெடுமை, குறுமை என்பன.

எ.கா. பவளத்தன்ன மேனி

### 4. 1. 15. 2 தொழிலுவமை

தொழிலுவமை என்பது ஒரு பொருள் செயல்படும் தன்மை.

எ.கா, 'அரிமா அன்ன அணங்குடைத்துப்பின் திருமா வளவன்'(29)

இதில் அரிமா என்பது உவமை, திருமா வளவனின் ஆற்றலைக் கூற அரிமாவின் ஆற்றல் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது.

### 4.1.15. 3 பயனுவமை

பயனுவமை என்பது செயலால் தோன்றுவது.

"மாரியன்ன வண்கைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே"

மழைபோல் கைமாறு கருதாமல் ஆய்வள்ளல் கொடை வழங்குவான் என்பதால் இது பயனுவமை.

மற்றும், பண்பி, பண்பு, தொழில், பயன் என கூறப்படுவன நான்கும் உண்டு, பண்பி என்பது காட்சிப் பொருளும் கருத்துப் பொருளுமாகிய இயங்குதலையும், நிலைத்திணையுமாகும் பண்பு என்பது அவற்றின் காரணமாகத் தோன்றி, தமக்கு வேறு குணமின்றித் திகழ்வது. தொழில் என்பது அவற்றின் புடை பெயர்ச்சியாய் காலம் புணர்ந்து நிற்பன, பயன் என்பது அவற்றின் காரணமாயப் புலப்படும் காரியம்.

பண்பு, தொழில், பயன் இவை உவமையாகும் போது தனித்து வருவதோடு அல்லாமல் தம்முள் கலந்தும் வரும்.

எடுத்துக்காட்டாக,

"காந்தள் அணிமலர் நறுந்தாது ஊதும் தும்பி
கையாடு வட்டிலில் தோன்றும்" (30)

இதில் பண்புவமையும், தொழிலுவமையும் கலந்து இடம் பெற்றுள்ளன.

மேலும் தண்டியாசிரியர் உவமையை இருபத்து நான்கு வகையாகப் பிரித்தார், அவை,

"விரியே தொகையே இதர விதரம்
உரைபெறு சமுச்சயம், உண்மை, மறுபொருள்
புகழ்தல், நிந்தை, நியமம், அணியமம்
ஐயம், தெரிதரு தேற்றம் இன்சொல்
எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை

பல பொருள் விகாரம் மோகம் அபூதம்
பல வயிற்போலி, ஒருவயிற்போலி
கூடாவுடமை, பொதுநீங்குவமை
மாலை என்னும் பாலதாகும்" (31)

### 4.1.15.4 பல்வேறு பார்வை

வீரசோழியம் உவமையை முப்பத்து மூன்று ன்றும், மாறனலங்காரம் முப்பத்து ஐந்து என்றும் விளக்குகின்றன. ஆனால், சந்திராலோகம், குவலாயநந்தம், அணி இலக்கணம் ஆகிய நூல்கள் உவமை வகையை விரியுவமை, தொகையுவமை என இரண்டு வகையாக மட்டுமே பிரிக்கின்றன.

### 4.1.16 உவமையின் உறுப்பகள்

உவமையின் உறுப்புகள் நான்கு, அவை உவமேயம், உவமானம், பொதுப்பண்பு, உவமை உருபு ஆகியவை. ஒப்புமை அறியக்காரணமாக இருக்கும் பொருள் உவமானம் உவமிக்கப் படும் பொருள் உவமேயம், உவமானம் உவமேயம் (பொருள்) ஆகிய இரு பொருள்களின் கண் ஒத்து அமைந்து, வண்ணம், தொழில், பயன் என்பன பற்றி அமைந்த ஒப்புத்தன்மையே பொதுப்பண்பு. உவமானத்தையும் (உவமை), உவமேயத்தையும் இணைக்கும் பொருளே உவமை உருபாகும்.

"பால் போலும் இன்சொல்"

| | | |
|---|---|---|
| பால் | - | உவமானம் |
| சொல் | - | உவமேயம், |
| இனிமை | - | பொதுப்பண்பு |
| போலும் | - | உவமை உருபு |

## 4.1.17 உவமை உருபுகள்

### 4.1.17.1 தொல்காப்பியர் கருத்து

தொல்காப்பியர் உவம உருபுகளை முப்பத்தாறாக வகைப்படுத்துகிறார்.

"அவைதாம் அன்ன வேய்ப்ப உறழ வொப்ப
வென்ன மான வென்றவை யெனாஅ
வொன்ற வொடுக்க வொட்ட வாங்க
வென்ற வியப்ப வென்றவை யெனாஅ
வெள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கருப்ப வாங்கவை யெனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ வாங்கவை யெனாஅ
நாட நலிய நடுங்க நந்த
வோடப் புரைய வென்றவை யெனாஅ
வாறா றவையு மன்ன பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே" (32)

தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு உவமை உருபுகள் பெருகின. இதனைப் பேராசிரியர்,

"பிறவும் என்பதனால் எடுத்தோதினலேயன்றி, நேர, நோக்க துணைப்ப, மலைய, ஆர, அமர, அனைய, ஏற, ஏற்ப, செத்து, அற்று, கெழுவ என்றற் தொடக்கத்தன பலவும், ஐந்தாம்வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும் என வென் எச்சங்கள் பற்றி வருவனவும் பிறவுமெல்லாம் கொள்க" (33) எனக் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர், நான்கு வகை உவமைகளுக்கும் தனித்தனியே உவம உருபுகளை வகுத்தார்.

"அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்" (34)

இவ்வெட்டும் வினை உவமத்திற்குரியவை.

"என்ன விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை வுவமம்" (35)

பயனிலை உவமமானது மேற்கூறிய எட்டினை உவமை உருபுகளாகக் கொண்டு அமையும் என்று கூறியுள்ளார்.

"கருப்ப ஏய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொகுங்க வோட்ட நிகர்ப்பவென்று
அப்பா லெட்டே மெய்ப்பா னுவமம்" (36)

இவ்வெட்டையும் நிலைக்களனாகக் கொண்டு மெய்ப்பானுவமம் பிறக்கும் என்றார்.

"போல மறுப்ப வொப்பக் காய்த்த
நேர வியப்ப நனிய நந்தவென்று
ஒத்துவரு கிழவி யுருவி னுவமம்" (37)

என உருவுவமம் அமையும் தன்மை இத்தகையது என்று கூறியுள்ளார்.

இவ்வாறு கூறியதோடு அமையாது, தத்தம் மரபில் தோன்றும் பொருள்களும் உள என்றும் குறிப்பிட்டுள்ளார், பின்னர் தோன்றிய இலக்கணநூலார் இவ்வாறு அமைக்கவில்லை. தம் காலத்தில் வழக்கில் இருந்த உவம உருபுகளை கையாண்டு வந்தனர். எனவே உவம உருபுகள் தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு மிகுதியாக வளர்ந்தன எனக் கொள்ளலாம்.

### 4. 1. 17. 2 தண்டியாசிரியர் கருத்து

தண்டியாசிரியர் இடைநிற்கும் உவமச் சொற்கள் முப்பத்து ஐந்து என்றார்.

"போல மானப் புரைய பொருவ
நேர கருப்ப நிகர நிகர்ப்ப
ஏர வேய மாயை வியைய
ஒப்ப வெள்ள வுறழ வேற்ப
அன்ன வனைய வயர வாங்க
என்ன விகல விழைய வெதிரத்
துணைதூக் கண்டாங்கு மிகுதனா வீழ
இணைசிவண் கேழற்றுச் செத்தொடு பிறவு
நவைதீர் பான்மை வுவமைச் சொல்லே" (38)

என்பது நூற்பா. பிறவும் என்றதனால் நாட, நக, நந்த கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள என்பனவும் உவமைச் சொற்களாகும்.

## 4. 1. 18 உள்ளுறை உவமமும் இறைச்சிப்பொருளும்

தொல்காப்பியர் உவமையைப் பொருள் புலப்படுத்தும் நெறியாகக் கொண்டதைப் போலவே, உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றையும் ஒரு சிறப்புமிக்க கூறாகவே எடுத்துரைத்தார். ஆனால், பிற்காலத்தே ஏனைய அணிகள் பெருவிளக்கம் பெற்றது போல உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றை அணிநூலார் போற்றியுரைக்கவில்லை.

தொல்காப்பியர் வகுத்த ஏனையுவமம், உள்ளுறையுவமம். இவற்றுள் உள்ளுறையுவமம் அகப்பொருளுக்கே உரியது. இவ்வடிப்படையில் தொல்காப்பியத்தில், அகத்திணை யியலும், பொருளியலும் விளக்கப்படுகின்றன, உள்ளுறை உவமம் அகத்திணைப் பாடல்களில் மட்டுமே வரும்.

இதனைப் பேராசிரியர்,

"மற்றிவையெல்லாம் அகப்பொருட்கே உரியனவாக விதந்தோதிய தென்னை, புறப்பொருட்கு வராதன போல எனின் ஆண்டு வருதல் அரிதாதலின் இவ்வாறு அகத்திற்கே கூறினார்" (39)

என்ற பேராசிரியரின் உரை தெளிவுபடுத்துகிறது. மேலும் தொல்காப்பியர் உள்ளுறை உவமத்திற்கு,

"உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து இறுவதே உள்ளுறை உவமம்" (40)

என்ற இலக்கண நெறி வகுப்பார்.

உள்ளுறை உவமம் உவமப்போலியாகும். இந்த உவமப் போலி என்னும் உள்ளுறை உவமமானது வினை, பயன், மெய், உரு என்ற நான்கினோடு பிறப்பு என்ற ஒன்றினையும் கூட்டி ஐந்து நிலைக்களனுடையதாய், தெய்வம் ஒழிந்த கருப்பொருளை உட்கொண்டு உவமான, உவமேயப் பொருளைத் தன்னுள் அடக்கி உவமஉருபுத் தொக்கு, களவு, கற்பு என்னும் கைகோளிரண்டிலும் விளையும் இன்ப, துன்பங்களைக் காட்டுவதாய், இசைதிரிந்து இசைப்பதாய் தலைவன், தலைவி முதலியோரால் குறிப்பாக உரைப்பதாகும். இதனை,

"உணர்தற்கு அரிதாம் உவமப்போலி
புணர்திறம் வினையே பொருண்மெய் யுருவெனப்
பிறப்பொடு மைந்தாம் பெற்றித்தாகிச்

சிறப்புறு திணைகளிற் தெய்வ மொழிந்த
கருப்பொருள் களனாகக் கட்டுரை பயின்று
முவமையோடை திருள்குறுத்த லூற்றயலா
யுவமச் சொற்றொக லொரு தலையாகியு
மன்பின் தளவா மகத்தினை யருவயி
னின்ப துன்பத் திசை திரிந்திசையாத்
துணைவன் துணைவி தோழி செவிலி
யுணையெனும் பாங்கன் பாணனென்றி வராற்
கொள்கையின் வருங் குறிப்புரைத்தாகும்" (41)

என்று மாறனலங்காரம் விளக்குகிறது.

செய்யுளுக்கு அழகை ஊட்டுவது உள்ளுறை உவமே. உள்ளுறைப் பாடலில் இடம்பெறும் மாந்தர்களின் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுவதோடு, அகப்பாடல்கள் அனைத்தும் கவிஞன் கூற்றாக அமையாமல், பாடல் மாந்தரின் கூற்றாகவே அமைவனவாகும். இத்தகு மரபுமுறை, தொல்காப்பியர் கால இலக்கியங்களில் பெரிதும் பயின்று வந்த ஒன்றாக இருத்தல் வேண்டும். எனவே, "காதல் மாந்தர்கள் தம் குறிப்பினை அமைப்பதற்கு நம் முன்னோர் கண்டெடுத்த இனிய நேரிய நாகரிக நெறியே உள்ளுறை உவமமாகும்." (42) என்ற கருத்து பொருத்தமாகவே உள்ளது எனலாம்.

"இறைச்சி என்பது உள்ளுறை உவமம் போன்று கருப்பொருள் ஒன்றனுள்ளே பிறிதொரு பொருளைக் கொள்வது. இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள் அ∴தாவது கருப்பொருளாகி நாட்டிற்கும்,

ஊர்க்கும் துறைக்கும் அடையாக வருவது", (43) என்பர் இளம் பூரணர்.

"இறைச்சி தானே யுரிப்புறத்ததுவே" (44) என இளம்பூரணரும்

இறைச்சி தானே பொருட் புறத்ததுவே (45) என நச்சினார்க்கினியரும் பாடினர். எனவே, வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளின் புறத்தே தங்கிய குறிப்புப் பொருளை இறைச்சி என வழங்குவது தமிழ் மரபாகக் கருதப்பட்டது.

"முகத்தினில் ஒளிபோல் முகிழ்த்த சொற்பொருளையும், மலரினில் மணம் போல் வயங்கும் உள்நெறியையும் மணியினில் ஒலி போல் மருவும் தொனியையும், கரும்பினுட் சுவை போல் கலந்த லட்சியத்தையும் கண்டும் நோக்கியும் களித்தும், பார்த்தும் தேறுதல் கடினம். செப்புதல் அரிதே" (46) என்றார் மு.மு. இஸ்மாயில்.

இக்கருத்துக்களால் உள்ளுறை, இறைச்சி என்ற இரண்டின் வேறுபாடு பிரித்து அறிதல் கடினம் என கருதப்படுகின்றது. உள்ளுறை என்பது மனம், எண்ணம், உணர்ச்சியோடு சம்பந்தப்படாத ஓர் உண்மையை உணர்த்துவது, ஆனால், இறைச்சி என்பது கூற்றின் உண்மையைக் கொண்டு ஓர் உட்படுத்தப்பட்ட விருப்பத்தைக் கூற முயல்வது, இதனையே இரண்டடிற்கு மிடையேயுள்ள வேறுபாடாகக் கருதலாம்.

### 4. 1. 19. உருவகம்

### 4. 1. 19. 1 தொல்காப்பியர்

உவமை, பொருளாகி ஒன்றிவிட்டநிலையில் தோன்றுவது உருவகம் எனலாம், தொல்காப்பியத்தில் உருவகம் பற்றி தனி நூற்பா தரவில்லை. தண்டியாசிரியர் உருவகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டின துருவகமாகும்" (47)

உவமையோடு மிக நெருங்கி அமைகின்ற உருவகம், உவமைக் களத்திலேயே தோன்றி, ஒப்புமை அடித்தளத்தில் உருவாகின்றது. உவமையைவிட உருவகம் மிக ஆழமானது; சிக்கலானது, ஒரு கவிதையின் தலையாய அம்சமே உருவகம் எனலாம்.

### 4. 1. 19. 2 மற்றும் சிலர் கருத்துக்கள்

அரிஸ்ட்டாட்டில் என்ற கிரேக்க தத்துவ ஞானி "உருவகமானது, கவிஞனின் உள்ளுணர்விற் பிறப்பதால் கற்பிக்க முடியாது. உவமைகள் மனச்சித்திரங்களாக இருப்பன, உருவகங்கள் உணர்வுக் காட்சிகளாக அமைவன. முன்னது காட்சிப் பொருளாகவும் பின்னது கருத்துப் பொருளாகவும் அமைவன" என்று கூறியுள்ளார். (48)

"உருவக அணியானது கலைஞர் ஒருவரின் கலைத்திறனின் முத்திரையாகும். ஏனெனில் ஒரு நல்ல உருவகம் என்பது வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமைகளை உற்று நோக்கி அறியவல்ல ஒரு இயற்கைப் பேராற்றலைப் பின்னணி யாகக் கொண்டு இயங்குவதாகும்", என்று பாலச்சந்திரன் அவர்கள் தனது இலக்கியத் திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடுகின்றார் (49)

உருவகத்தில் உவமான உவமேயம் வேறு வேறாக எண்ணப்படாது இரண்டும் ஒன்றாகவே அமைவதுடன் உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதல் உருவகத்தின் இலக்கணமாகும்". என்று அணியியல் கூறுகின்றது. (50)

இதுகாறும் உவமை என்ற சொல் வழக்கு குறித்தும் உவமையின் நிலைக்களன், உவமைப் பயன், போல்வன பற்றியும், உவமையின் வகைகள் பற்றி தொல்காப்பியம், தண்டியலங்காரம், வீரசோழியம், மாறனலங்காரம் ஆகிய இலக்கண நூல்களில் பாகுபாடு செய்யும் பான்மை பற்றியும், உவமையின் உறுப்புகள் உருபுகள், உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் முதலியன குறித்தும் ஆராய்ந்தோம். உவமையணி செய்யுளில் இடம் பெற்றுள்ள நிலை பற்றியும், வடநாட்டு, மேனாட்டு இலக்கியங்களில் உவமைகள் பற்றிய செய்திகள் பற்றியும், தொடர்ந்து கந்த புராணத்துள் உவமை பற்றியும் ஆராய்வோம்.

## 4. 2 சங்க இலக்கியங்களில் உவமை.

சங்க இலக்கியங்களில் உவமையணி, புலவர் களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தது. உவமை

யணியைக் கையாள்வதில் அவர்கள் பல மரபுகளை மேற்கொண்டு வந்தனர். ஓரிரு சொல் அல்லது தொடரில் அமைந்த உவமைகள், நீண்ட உவமைகள், அடிதோறும் அமைந்த உவமைகள் போன்று பல.

பிறை நுதல், (நற்றினை 120-4)
கார் கூந்தல், (ஐங்குறுநூறு 300-1)
பணைத்தோள், (பதிற்றுப்பத்து 2-25)

போன்ற சிறு உவமைகள் மரபு உவமைகள். இயற்கை வருணைகளில் உவமைகள் நீண்டு வருகின்றன. கலித்தொகையில் இவை இடம் பெறுகின்றன. பாடல்களின் தொடக்கத்தே உவமையணியை அமைத்தும் அழகு செய்தனர். பாலைப் பாடிய பெருங்கடுங்கோ இளவேனில் பருவத்தைப் பாடும்போது, அடிதோறும் உவமைகளை அமைத்துப் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக,

"செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
வெரி வெந்த கரிவறல் வாய்ப்பு குவ காணாவாய்ப்
மலர்ந் தன்ன" (51)

என்ற பாடல் வரியில் முதல் வரியிலேயே உவமையை அமைத்துள்ளார். சங்க அகப்பாடல்களில் அமைந்துள்ள உள்ளுறை, இறைச்சி போன்றவை உவமையின் தனிச்சிறப்புகளாகும். மற்றும் திணைப் பாடல்களில் திணையைக் குறித்தற்கு இத்தகு உவமை நுணுக்கம் வேண்டற்பாலது. பல்வேறு காட்சிகளை நீண்ட உவமையில் அமைத்துப் பாடும் சங்கப் புலவர்களுக்கு

உவமையணியானது இனிமை, சுவை, இவற்றினூடே பொருள் து க்கம் காட்டுவதற்கும் பயன்பட்டது எனலாம்.

## 4. 3 காப்பிய உவமை.

பொருளை விளக்குவதற்காக மட்டுமன்றி, அடிப்படைக் கருத்துக்கு வலிமை சேர்ப்பதற்காகவும் வருணனைக் காட்சிகளை மனதில் பதியவைப்பதற்கும் காப்பியங்களில் உவமைகளைக் கையாளுவதுண்டு. இவை இலக்கியச்சுவை உடையதாக அமைந்து விடும். இயல்பான காப்பிய உவமை என்பது பொருளோடு ஒருங்கிணைந்தோ, வேறொன்றில் தொடர்பு கொண்டோ அமைகின்றது.

## 4. 4 காப்பிய உவமை பற்றி மேனாட்டார் கருத்து

மேனாட்டுக் காப்பியப் புலவர்களான ஹோமர், வெர்ஜீல் மில்டன், போப் போன்றோர் தங்கள் காப்பியங்களில் பல்வேறு உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் நீண்டு விரியும் உவமையைக் காப்பிய உவமை என்கின்றனர்.

"மிக விரிவாகவும் இணைவான ஒப்புமை உடையனவாயும், காட்சியருமையை விளக்கமுற மனதில் பதிப்பிக்க வல்லதாயும் அமைவனவற்றையே காப்பிய உவமை" என்று சுட்டிக்காட்டியுள்ளனர். (52)

### 4. 4. 1 ஹோமர் கருத்து

ஹோமரின் காப்பிய உவமைகள், அவர்கண்ட கூரிய வாழ்வியல் நோக்கைப் புலப்படுத்துவன. காப்பியச் செறிவு, ஆர்வ நாட்டம், எதிர்பாராத நிகழ்ச்சிகள், அணிநயம் தோன்ற எடுத்துக் கூறல் ஆகிய காரணங்களுக்காகக் காப்பிய உவமைகளைத் தம் படைப்பில் அமைத்து, ஏனைய புலவர்களுக்கு முன் மாதிரியாக விளங்குகிறார். இவர் இயற்கை உவமைகளைச் சுட்டிக் காட்டி இன்புறுத்தும் ஆற்றல் மிக்கவர்.

### 4. 4. 2 மில்டனின் கருத்து

மில்டனின் உவமைகள் ஆங்கிலக் காப்பிய உலகில் தன்னிகரற்று விளங்குவன. அவர் உவமைகளைக் கையாளும் போது, கதை நிகழ்ச்சிகளோடு பொருத்தமுற அமைப்பதோடன்றி, அவை கதையின் ஒரு பகுதியாகவும் விளங்குவதுண்டு மிலடன், காப்பிய உவமைகளை இருநிலை களில் எடுத்தாள்கிறார். ஒன்று, மனித வாழ்வின் எண்ணங்களை அலசி ஆராய்தல், மற்றொன்று வருணனைக்கேற்பக் கூறவரும் சூழ்நிலையை மேலான நிகழ்ச்சி ஒன்றால் குறிப்பிடுதல். இந்த இருநிலைகளையும் மில்டனின் இழந்த துறக்கம் என்ற பெருங்காப்பியத்தில் காணலாம்.

### 4. 5. காப்பிய உவமையின் பொதுத்தன்மைகள்.

தமிழ்மொழியில் காப்பிய உவமை என்ற தொடரினை இலக்கண ஆசிரியர்கள் பயன்படுத்தியிருப்பதற்குரிய சான்றுகள்

இல்லை. உவமை என்பது ஓர் இலக்கிய அணி. இலக்கிய வகைகளுக்கு ஏற்ப (பாடல், காப்பியம், சிறுகதை, நாடகம், நாவல்), இவ்வணி எவ்வெவ்வகையில் மாறுபடும் என்பது பற்றி இலக்கணநூலார் நுணுக்கமாகச் சிந்திக்கவில்லை. அணியிலக்கணங்களும் இதனைக் குறிப்பிடவில்லை. மேனாட்டு இலக்கியத் தொடர்பில் தோன்றிய வழக்கு முறையையே காப்பிய உவமையாகக் கொண்டு, சில பொதுத்தன்மைகளை பயன்படுத்தியுள்ளோம். அவையாவன,

1. நீண்ட தொடரால் அமையப் பெறல்
2. அரசியல், புராணம், சமயம், வரலாற்றுச் செய்திகளை உவமித்தல்.
3. நீண்ட நெடுங்காவியத்தில் உவமைகளைக் காட்டி அணிநலன் சிறக்கச் செய்து, தங்கள் புலமையை வெளிப்படுத்துவதில் புலவர்கள் நாட்டம் கொள்ளுதல்.
4. அறிந்த பொருள்களைக் காப்பிய உவமையில் அமைப்பதில் விழைவு காட்டல்.
5. இல்பொருள் உவமையை எடுத்தாண்டு வியப்பில் ஆழ்த்துதல் புலவரின் உத்திகளில் ஒன்றாதல்.
6. கதை நிகழ்ச்சியின் அடிப்படையில், பொருளின் ஆழத்திற்கு ஏற்பவும், இடச்சூழ்நிலையின் இன்றியமையாத தன்மைக்கு ஏற்பவும் உவமையை அமைத்தல்.
7. வெளியீட்டுத் திறனையும், கற்பனை வளத்தையும் ஒருங்கே புலப்படுத்துவதில் ஆர்வமுறல்.
8. அனைவரும் அறிந்த கதை முதலியவற்றை எடுத்தாளும் மரபைக் கையாளுதல்.

தமிழ்க் காப்பியங்களிலும் புராணங்களிலும் மேற்கூறிய பொதுத்தன்மைகளைக் கொண்டே உவமைகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் காப்பியங்கள் தோன்றத் தொடங்கியதே இதற்குக் காரணம் எனலாம்.

## 4. 6 முடிவுரை

தொடக்க காலத்தே மிகச் சுருங்கிய வடிவில் அமைந்த உவமை நாளடைவில் விரிவுபெற்றன. தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றால் காட்சி வருணனை, உணர்ச்சி சான்ற சூழல் ஆகியவற்றை விளக்கக் காப்பிய உவமைகள் பயன்பட்டன. இவற்றிற்கு வித்தாக அமைந்தன கலித்தொகையில் அமைந்த நீண்ட தொடர்கள். இவை ஆசிரியப்பாவால் அமைந்த காரணத்தால் உவமைகளை விரிந்த நிலையில் விளங்க உரைக்கின்றன. பின்னர்த் தோன்றிய காப்பியங்களில் காவிய உவமைகள் என்று கூறத்தக்க அளவுக்கு உவமைகள் அமையவில்லை. விருத்தப்பாவால் இயன்ற காப்பியங்களிலும், புராணங்களிலும் உவமைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. சீவக சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய காப்பியங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

# அடிக்குறிப்புகள்

1. தொல் - உவமையியல் - நூற்பா - 2
2. தொல் - மேலது - நூற்பா - 24
3. மு.வரதராசன்- ' அணி இலக்கணம் '
   (Prof Sundaram Pillai Commemoration volume P. 158).
4. மா. இளையபெருமாள்- உவமை என்ற
   சொல் விளக்கம் கட்டுரை பக் 22
5. மு.வரதராசன் - ' அணிஇலக்கணம்'
   (Prof. Sundaram Pillai Commemoration volume P. 226)
6. மாறனலங்காரம் - முகவுரை பக் 13
7. Princeton. Encyclopaedia of Poetry and Poetics - P. 767)
8. தொல்- உவமவியல்- சேனாவரையர் உரை பக் 222
9. இந்திரா சுபலட்சுமி - காப்பிய உவமை - 'வையைமலர்' 2
10. விமலானந்தன் - பாரதிபாநலன்-தில்லித்
    தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர் 1971
11. மு.வ இலக்கியத்திறன் - 1959 பக். 227
12. தொல் உவமவியல் நூற்பா 278
13. நா. சுப்புரெட்டியார் கவிதை அனுபவம் - பக் 211
14. நாலடியார் - கழக வெளியீடு
15. தொல் உவமவியல் - நூற்பா 279
16. பொருநராற்றுப்படை - கழக வெளியீடு- பக். 546
17. புறநானூறு மேலது - பாடல் எண் - 256
18. பட்டினப்பாலை மேலது - பாடல் எண் - 298
19. தொல் - உவமஇயல் - பேராசிரியர் உரை- பக் - 65
20. தொல் மேலது நூற்பா - 5
21. அகநானூறு - கழக வெளியீடு பா. எண் 313

22. மாறனலங்காரம் - பொருளணியியல் - உரை 92
23. தொல் - உவமயியல் நூற்பா - 276
24. தண்டியலங்காரம் - கழக வெளியீடு பா. எண் 3
25. மாறனலங்காரம் - மேலது பா. எண் 92
26. தொல் - உவ - பேராசிரியர் உரை- பக் - 59
27. தண்டியாசிரியர் - பொருளணியியல் பக் 81
28. தொல் - உவ பக் 58
29. பட்டினப்பாலை - கழக வெளியீடு பா. எண் 298
30. தண்டியாசிரியர் உவமைக்கு எடுத்துக்காட்டாக கையாண்ட பாடல்
31. தண்டியலங்காரம் நூற்பா 31
32. தொல் உவ நூற்பா 286
33. தொல் - உவமவியல்- பேராசிரியர் உரை பக் - 75
34. தொல் - உவமவியல் - நூற்பா 287
35. தொல் - மேலது - நூற்பா 289
36. தொல் - மேலது - நூற்பா 290
37. தொல் - மேலது - நூற்பா 291
38. தண்டியலங்காரம் - கழக வெளியீடு நூற்பா 291
39. தொல் - உவமவியல் -பேராசிரியர் உரை - பக் 31
40. தொல் - உவமவியல் - நூற்பா 48
41. மாறனலங்காரம் நூற்பா 123
42. வ.சுபமாணிக்கம் - ' தமிழ்க் காதல் ' பக் 221
43. தொல் - இளம்பூரணர் உரை - கழக வெளியீடு
44. தொல் - மேலது
45. தொல் - நச்சினார்க்கினியர் உரை
46. மு. இஸ்மாயில் - மும்மடங்கு பொலிந்தன நூலின் முன்னுரை
47. தண்டியலங்காரம் - கழக வெளியீடு நூற்பா 36

48. க.கைலாசபதி - ' கவிதை நயம்' பக் 21

49. பாலச்சந்திரன் - இலக்கியத் திறனாய்வு - பக் 180

50. இலக்கண விளக்கம்- அணியியல் - பக் 54

51. பாலைக்கலி பாடல் எண் 13

52. GSE Page No. - 93